**செ.வெ.எண்: 143** **நாள்: 16.12.2020**

# பத்திரிக்கைச்செய்தி

## அம்மா இருசக்கரவாகனம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு குறித்த குறுகியகால பயிற்சி

அரசினா் தொழிற்பயிற்சி நிலையம் **கடையநல்லூரில்** வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தியவா்களுக்கும் இந்நிலையத்தில் அம்மா இருசக்கரவாகனம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு குறித்த இலவச குறுகியகால பயிற்சி விரைவில் ஆரம்பமாக இருக்கிறது. பயிற்சிக்காலம் 300Hours (இரண்டுமாதங்கள்). இப்பயிற்சியில் சேரவிரும்பும் 5 ம் வகுப்பு தேர்ச்சி அதற்கு மேலும் கல்வித்தகுதியுடைய 18 முதல் 40 வயதுக்குள் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், தங்களது கல்விச்சான்று, சாதிச்சான்றிதழ், ஆதாா் அட்டை மற்றும் புகைப்படத்துடன் அலுவலக வேலை நாட்களில் நேரில் நிலையத்திற்கு வந்து விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சியில் சேரும் பயிற்சியாளா்களுக்கு நாள் ஒன்றுக்கு போக்குவரத்து செலவு உதவித்தொகைரூ.100/- வீதம் 85%வருகைபுரிந்த பயிற்சியாளா்களுக்கு பயிற்சியின் முடிவில் வழங்கப்படும். இந்த திறன் எய்தும் பயிற்சி முடித்தவா்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சியில் சேரவிரும்பும் **கடையநல்லூா்** சுற்று வட்டார பயிற்சியாளா்கள் உடனடியாக முதல்வா், அரசினா் தொழிற்பயிற்சி நிலையம், கடையநல்லூா் முகவரிக்கு நேரில் வந்து 04.01.2021 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**